## பழமொழிகளை அதன் பொருளுடன் இணைத்திடுக.

| பழமொழி | பொருள் |
| --- | --- |
| காற்றுள்ள போதே தூற்றிக் கொள். | குற்றம் செய்தவனின் மனசாட்சி அவனை வருத்திக் கொண்டிருக்கும். |
| ஒன்று பட்டால் உண்டு வாழ்வு. | எதையும் முறையாகப் பயிற்சி செய்து வந்தால்தான் அதில் நாம் வல்லமை பெறமுடியும். |
| குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும் | கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்தி, சூழ்நிலை சாதகமாக இருக்கும்போதே வேண்டியதைச் சாதித்துக்கொள்ள வேண்டும். |
| சிக்கனம் சீரளிக்கும். | எல்லாரும் ஒன்றிணைந்து ஒருமித்த கருத்தோடு செயல்பட்டால் நல்வாழ்வு அமையும். |
| சிறு துரும்பும் பல் குத்த உதவும். | தேவைக்கு ஏற்பச் சிக்கனமாகச் செலவு செய்து சேமித்து வாழ்ந்தால் சிறப்புற வாழலாம். |
| சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம். | தேவையற்றது அல்லது அற்பமானது என நாம் நினைக்கும் பொருளும் தக்க வேளையில் நமக்கு உதவும். |

https://t.me/learntamilbyparamesvariperisamy

LIVEWORKSHEETS